தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2021

ஆண்டு: 9 திகதி: 12/06/2021

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு. ச. தேவராசா

மாணவர் பெயர்: ____________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.**

1. வணக்கம்

___________________________________________

___________________________________________

2. தமிழ்மொழி

___________________________________________

___________________________________________

3. நட்சத்திரங்கள்

___________________________________________

___________________________________________

4. அன்னை

___________________________________________

___________________________________________

5. சோறு

___________________________________________

___________________________________________

6. குளிர்பானம்

___________________________________________

___________________________________________

7. புத்தகங்கள்

___________________________________________

___________________________________________

8. காலை

___________________________________________

___________________________________________

9. ஆடியது

10. விளையாடுகின்றனர்

11. வருவான்

12. சிரித்தாள்

13. பாய்கின்றன

14. ஓடுவார்கள்

15. விழித்தேன்

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

மக்களின் மனதுக்கு மகிழ்ச்சியை அளிப்பனவாகக் கலைகள் விளங்குகின்றன. நடனம், நாடகம், இசை, சிற்பம், ஓவியம், கட்டடம் போன்றன தமிழ்க் கலைகளாக அமைகின்றன. விவசாயம், மீன்பிடித்தல், கைத்தொழில் போன்ற தொழில்களைச் செய்து களைத்துப்போன மக்கள் மாலை வேளையில் தமது ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்காக நடனம், நாடகம், இசை போன்ற கலைகளை உருவாக்கினர். கும்மி, கோலாட்டம் போன்ற நடனங்கள் பழைய காலத்திலிருந்து ஆடப்பட்டு வருகின்றன. நாடகக் கலை ஆரம்பத்தில் கூத்து என்றழைக்கப்பட்டது. புராண, இதிகாச வரலாற்றுக் கதைகளை ஆடிப், பாடி, நடித்துக் கூத்துகளை உருவாக்கினர். சூரியன் மறையும் போது ஆரம்பிக்கும் கூத்துகள் மறுநாள் சூரியன் உதயமாகும் போதே நிறைவடையும். இவ்வாறு நீண்ட நேரத்தைக் கொண்ட கூத்துகள் தற்போதும் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் ஆடப்பட்டு வருகின்றன. திரும்பத்திரும்பப் பார்த்த அல்லது கேட்ட கதைகள், நீண்டநேரம், அதிகமான பாடல்கள் போன்றவற்றால் சலிப்படைந்த மக்கள் அளவான நேரத்தில் வளமான கருத்துக்களைக் கூறுகின்ற நாடகக் கலையில் விரும்பம் கொண்டனர். இதனால் நாடகக்கலை வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது. தமிழரின் வாழ்க்கையில் இசைக்கலை முக்கியத்துவம் பெற்றுள்ளது. குழந்தையைத் தூங்கவைக்கத் தாலாட்டுப் பாட்டு, ஊஞ்சல் ஆடுகின்ற போது ஊஞ்சல்ப் பாட்டு, வயலில் நாற்று நடும்போது நடுகைப் பாட்டு, நெல்லை அறுவடை செய்கின்ற போது அறுவடைப் பாட்டு, மீன்பிடிக்கக் கடலில் படகைச் செலுத்தும் போது ஏலேலோப் பாட்டு, இறப்பின் போது ஒப்பாரிப் பாட்டு என்று தமிழர்கள் இசையோடு கூடிய பாடல்களைத் தொன்று தொட்டுப்பாடினர். இப்பாடல்கள் நாட்டார் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன.

கற்களை உளிகளால் செதுக்கி சிற்பி சிற்பங்களை உருவாக்குகின்றான். சுமார் 1300 வருடங்களுக்கு முன்பு கி.பி ஏழாம் நூற்றாண்டில் மாமல்லன் என்று அழைக்கப்பட்ட நரசிம்ம பல்லவ மன்னனால் உருவாக்கப்பட்ட சிற்பக் கோயில்களை இன்றும் மாமல்லபுரத்தில் காணலாம். பல குன்றுகளைக் கொண்ட மாமல்ல புரத்திற்கு சிற்பிகளை வரவழைத்தான். அவர்கள் குன்றுகளைச் செதுக்கி அழியாத சிற்பங்களை உருவாக்கினர். ஓவியர்கள் கடவுள் உருவங்களையும், மன்னர்களின் தோற்றத்தையும் ஓவியங்களாக வரைந்து இலைகளின் சாறு, மலர்களின் சாறு போன்றவற்றிலிருந்து தயாரித்த மைகளால் வர்ணம் பூசி ஓவியக் கலையை வளர்த்தனர். 1000 வருடங்களுக்கு முன்பு தஞ்சாவூரில் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டு இன்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் தமிழரின் கட்டடக்கலைச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

1. தமிழரின் கலைகள் ஆறையும் எழுதுக. (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

2. என்ன காரணத்திற்காக கலைகள் உருவாக்கப்பட்டன? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

3. தற்காலத்தைப் பொறுத்தவரையில் கூத்துகள் மேடையேறுவது நல்லதா? நாடகங்கள் மேடையேறுவது நல்லதா? காரணங்கள் எழுதுக . (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

4. பின்வரும் அட்டவணையில் உள்ளவர்களுடன் தொடர்புடைய பாட்டுகளை அவர்களுக்கு நேரே எழுதுக. (5 புள்ளிகள்)

| **மக்கள்** | **பாட்டு** |
|---|---|
| குழந்தை | |
| விவசாயி | |
| மீனவன் | |
| ஊஞ்சல் ஆடுபவள் | |
| இறந்தவர்கள் | |

- BLANK PAGE -

5. நரசிம்ம பல்லவன், ராஜராஜ சோழன் ஆகிய மன்னர்கள் முறையே சிற்பக்கலையிலும், கட்டடக்கலையிலும் செய்த சாதனையைப் பற்றி உங்களின் அபிப்பிராயத்தைச் சுருக்கமாக எழுதுக. (4 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

சிட்னி தமிழ் மன்றத்தின் இயல், இசை, நாடக விழா பிளாக்றவுண் போமன் மண்டபத்தில் நடைபெற்றது. அதற்கான நுழைவுச் சீட்டுகளை அப்பா வாங்கியிருந்தார். எனவே அப்பாவும், அம்மாவும், நானும் விழாவுக்குச் சென்றோம். தமிழ்மொழி வாழ்த்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து காதுக்கினிய பாடல்களை ஒரு இசைக்குழுவினர் பாடினர். பல்வேறு நடனங்களைச் சிறுமிகள் ஆடிப் பார்வையாளரின் கரகோசங்களைப் பெற்றனர். இடைவேளையின் போது பிள்ளைகள் 10 டொலர்கள் விலையுள்ள அதிஷ்டச் சீட்டுகளை விற்பனை செய்ய வருவார்கள். முதலாவது பரிசு 80 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான புத்தம் புதிய BMW மகிழுந்து எனவே அதிஷ்டச் சீட்டுகளை வாங்குமாறு அறிவிப்பாளர் அறிவித்தார். இடைவேளை விடப்பட்டது. அதிஷ்டச் சீட்டுகளை சிறுவர்கள் விற்பனை செய்ய வந்தார்கள். எனது சட்டைப் பையில் 10 டொலர்கள் இருந்தன. நான் ஒரு அதிஷ்டச்சீட்டை வாங்கினேன். இடைவேளை முடிந்து மீண்டும் நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. கரிகாலச் சோழன் என்ற வரலாற்று நாடகத்துடன் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. அப்பா வீட்டுக்குப் புறப்படுவோம் என்றார். அதிஷ்டச் சீட்டு ஒன்றை வாங்கியுள்ளேன். முடிவுகளை அறிந்துவிட்டுப் புறப்படுவோம் என்றேன். அப்பாவும் சரி என்றார். அதிஷ்டச் சீட்டுகளைக் குலுக்கி முதல் பரிசு பெற்ற சீட்டை எடுத்து அதன் இலக்கத்தை அறிவித்தனர். எனது சீட்டை எடுத்துப் பார்த்தேன். என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை. இரண்டு இலக்கங்களும் ஒன்றாக இருந்தன. எனக்கு முதல்பரிசு கிடைத்துள்ளது. மகிழ்ச்சியுடன் மேடையை நோக்கி ஓடினேன் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் 15 தனிவாக்கியங்களை ஒரே வினைமுற்றில் முடியக்கூடிய தொடர்வாக்கியமாக எழுதுக.**

1. எங்களுக்கு இரண்டு வாரம் ஈஸ்டர் விடுமுறை விடப்பட்டது.
2. இந்த விடுமுறைக்கும் எங்களை வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லும் எண்ணம் இல்லையா? என்று அம்மாவிடம் கேட்டேன்.
3. பிறிஸ்பேன் மாமா வீட்டிற்குப் போகலாமா? என்று தம்பி கேட்டான்.
4. அப்பா அலுவலகத்தால் வந்த பின்பு அவரிடம் கேட்போம் என்று அம்மா கூறினார்.
5. அப்பாவின் வருகைக்காகக் காத்திருந்தோம்.
6. மாலை ஆறுமணிக்கு அப்பா அலுவலகத்திலிருந்து வீடு திரும்பினார்.
7. நானும், தம்பியும் அப்பாவிடம் எங்கள் விருப்பத்தைக் கூறினோம்.
8. மார்கழி விடுமுறையின் போதும் பிள்ளைகளை ஒரு இடத்திற்கும் அழைத்துச் செல்லவில்லை என்று அம்மா கூறினார்.
9. என்ன செய்வது? நிலைமை இவ்வாறு ஆகிவிட்டது என்று அப்பா கூறினார்.
10. பிறிஸ்பேனில் உள்ள எனது தம்பி வீட்டிற்காவது அவர்களைக் கூட்டிச் செல்வோமா? என்று அம்மா கேட்டார்.
11. எல்லோருக்கும் மனநிம்மதியும், ஆறுதலும் தேவையென்பதனால் போவோம் என்று அப்பா சம்மதம் தெரிவித்தார்.
12. நானும் தம்பியும் ஆனந்தம் ஆடைந்தோம்.
13. விமானத்தில் பயணம் செய்து பிறிஸ்பேனை அடைந்தோம்.
14. மாமாவின் வீட்டில் தங்கியவாறு பல்வேறு இடங்களுக்கும் சென்றோம்.
15. பத்து நாட்களை மகிழ்ச்சியாகக் கழித்த பின் சிட்னிக்கு வந்தோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **5** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **12** |

- நீங்கள் வாழ்கின்ற நகரம் உங்களுடைய தேர்தல் தொகுதியில் பெரிய நகரமாக உள்ளது.
- உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் உங்களுடைய நகரத்திற்குப் பல்வேறு வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளார்.
- இருந்தாலும் நவீன வசதிகளையும், பார்வையாளர்கள் உட்கார்ந்து விளையாட்டுகளைப் பார்ப்பதற்கான இருக்கைகளையும் கொண்ட விளையாட்டு மைதானத்தின் தேவை அவசியமாக உள்ளது.

மேல தரப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டு மைதானத்தின் அவசியத்தை விளக்கி அதனை அமைத்துத் தருமாறு **100** சொற்களுக்குக் குறையாமல் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒரு கடிதம் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 14 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1.

- தினமும் ஆயிரக்கணக்கான விமானங்கள் வளி மண்டலத்தில் பறந்து வளிமண்டலத்தை மாசு படுத்திக் கொண்டிருந்தன.
- இலட்சக்கணக்கான மக்கள் தினமும் விமானங்களில் பறந்து கொண்டிருந்தனர்.
- பெருந் தொற்றுக் காரணமாக விமானங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றன.
- வளிமண்டலம் தூய்மையாகத் தெளிவாகக் காணப்படுகின்றது.
- வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு எமது விடுமுறைகளை மகிழ்ச்சியுடன் கழிக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எங்கள் மனதில் உள்ளது.
- முன்பு மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களை நினைத்து ஆறுதல் அடைய வேண்டியுள்ளது.

"**எனது வாழ்க்கையில் மறக்க முடியாத வெளிநாட்டுப் பயணம்**" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை.

2.

- எங்களைப் பத்துமாதங்கள் சுமந்து பல்வேறு வகையான துன்பங்களைத் தாங்கிப் பெற்றெடுத்தவள் எமது அன்னை.
- பல்லாண்டு காலம் பாடுபட்டு வளர்ப்பவர் எமது அன்னை.
- எமது முன்னேற்றம், எமது நன்மை, எமது மேன்மை என்பவற்றிற்காகத் தம்மை அர்ப்பணித்தவர் எமது அன்னை.

மேலே தரப்பட்ட தரவுகளை அடிப்படையாக வைத்து "**அன்னையர் தினம்**" என்ற தலையங்கத்தில் உங்கள் பாடசாலையில் உரையாற்றுவதற்காகத் தயாரித்த பேச்சு.

3. நான் கண்ட பயங்கரமான கனவு என்ற தலைப்பில் ஒரு கட்டுரை.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________